**தன்னெஞ் சறிவது பொய்யற்க பொய்தபின்**
**தன்னெஞ்சே தன்னைச்சுடும் (குறள்.எண்.293)**

**பொருள்:** ஒருவன் பொய்யென்று அறிந்த ஒன்றை மறைப்பானையின்
அவன் நெஞ்சே அவனை வருத்தும்

**பழனி நகராட்சி**

2018–ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 16–ம் நாள். திங்கள்கிழமை காலை 11.00 மணியளவில் பழனி நகராட்சியில் அவசரக் கூட்டம் தனி அலுவலர் முன்னிலையில் நடைபெறும்.

நகராட்சி அலுவலகம், பழனி
நாள். 16–04–2018

தனி அலுவலர்
பழனி நகராட்சி

**கூட்டப்பொருள்**

**1.** தமிழ்நாடு அரசு சிறப்பரசிதழ் எண்.33, நாள்: 25.01.2018ல் சட்ட எண்.6/2018 தமிழ்நாடு நகராட்சிகள் சட்டங்கள் (இரண்டாவது திருத்த சட்டம்) 2018 வாயிலாக தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920ன் பிரிவு 83 உட்பிரிவு 1 பகுதி (சி)க்கு கொண்டு வரப்பட்டுள்ள திருத்தத்தின்படி அரசு அல்லது நகராட்சி அல்லது இதர உள்ளாட்சி அமைப்புகள் அல்லது அரசு உதவிபெறும் கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றால் கல்விக்காரியத்திற்காக பயன்படுத்தப்படும் தங்கும் விடுதிகள், நூலகங்கள் உட்பட்ட அனைத்துக் கட்டிடங்களுக்கு மட்டும் சொத்துவரி விதிப்பிலிருந்து விலக்களிக்க வேண்டும் எனவும், ஏனைய அனைத்து கல்விக் கட்டிடங்களுக்கும் மற்றும் சுயநிதி பாடப்பிரிவுகளைக் கொண்ட அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்களின் கட்டிடங்களுக்கும் சொத்துவரி விதிக்கப்பட வேண்டும் என சட்டமாக்கப்பட்டுள்ளது. கூட்டப்பொருள் ஒப்புதலுக்கும் பார்வைக்கும் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1. பதிவு செய்யலாம்
2. பழனி நகராட்சிப் பகுதியில் நடைபெற்று வரும் அரசு அல்லது நகராட்சி அல்லது இதர உள்ளாட்சி அமைப்புகள் அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றிற்குச் சொந்தமான கல்விக் கட்டிடங்கள், தங்கும் விடுதிகள், நூலகங்கள் ஆகியவற்றைத் தவிரஅனைத்து கல்விக் கட்டிடங்களையும் மற்றும் சுயநிதி பாடப்பிரிவுகளைக் கொண்ட அரசு உதவிபெறும் கல்வி நிறுவனங்களின் கட்டிடங்களையும் நகராட்சி பொறியாளர், நகரமைப்பு அலுவலர் ஆகியோர் அளவீடு செய்து உரிய பரப்பளவு விபரங்களை அளிக்கவும், அதனடிப்படையில் குடியிருப்பிற்க்கு விதிக்கப்படும் சொத்துவரி விகிதத்தில் 1.5 மடங்கு சொத்துவரியாக விதிக்க அறிவிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் அந்தக்கல்வி கட்டிடத்திற்கான சொத்துவரித் தொகையை நிர்ணயிக்கவும் அனுமதிக்கலாம்.

நகராட்சி அலுவலகம், பழனி
நாள். 16–04–2018

தனி அலுவலர்
பழனி நகராட்சி